உ
சிவமயம்



மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி. சுப்பிரமணியம் சரஸ்வதி

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

21.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

21.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்



நல்லறமாய் இல்லறத்தை இனிதாக்கி
நல்விருட்சமாய் நின்று நிழல்பரப்பி
எம் உயர்விற்காய் உமை உருக்கி
எங்கள் எல்லோரினது இதயங்களிலும்
இன்முகத்துடன் குடிகொண்ட
எங்கள் தெய்வத்தாயே!
நாம் தங்கள் பாதங்களில்
கண்ணீருடன் ஏற்றும் இந்த அஞ்சலித்
தீபத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.



**மக்கள், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கினும் உனை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

## திருவாசகம்

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறவுளறி உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவுமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

நீர் வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற இலங்கை நாட்டிலே சைவமும் தமிழும் சிறப்புடன் விளங்கும் செந்தமிழ் நகரமாம் யாழ்ப்பாண நகரத்தில் அமைதியின் சின்னமாகவும் ஆலயங்கள் பல சிறப்புற்று விளங்கும் மாதகல் என்னும் அழகிய ஊர் உள்ளது. இவ்வூரின் கண் மருதநிலமும், நெய்த நிலமும் ஒருங்கே அமைந்துள்ளதால் அவ்வூரின் செல்வச் சிறப்பினை அளவிடமுடியாது. வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்ட சம்பில் துறைமுகம் ஊரின் அழகை மேலும் மெருகூட்டி நிற்கின்றது.

அது மட்டுமல்லாது இங்கு வாழ்ந்த மயில்வாகனப் புலவர், ஏரம்பையர், அருணாசல சாஸ்திரியார், சிற்றம்பல புலவர் போன்ற அறிஞர்களும் வாழ்ந்த சிறப்புடைய ஊராக மாதகல் பதி விளங்குகிறது. அத்தோடு இக்கிராமத்தில் கோயில் கொண்டு விளங்கும் புவனேஸ்வரி அம்மன், மாதகல் நுணசை முருகன், அரசடி சித்திவிநாயகர் போன்ற காவல்த் தெய்வங் கள் இவ்வூர் மக்களுக்கு அருள்பாலித்தவண்ணம் கொலுவிருக் கின்றன.

இவ்வூரில் வசித்து வந்த அம்பலவாணர் குஞ்சரம் தம்பதி களின் இல்வாழ்வின் பயனாக அமரர் சரஸ்வதி செல்வப் புதல்வியாக அவதரித்தார். இவருக்கு ஆசைக்கொரு அக்கா வாம் செல்லம்மாவும் (அமரர்), அருமைத்தங்கை அன்னம்மா வும் (அமரர்), அன்புத் தம்பி சுப்பிரமணியம் (அமரர்) கூடிப் பிறந்தனர்.

அமரர் திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி தனது கல்வியை யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக்கொண்டார். அமரர் தனது சிறுவயதில் இருந்தே கூர்மை யான மதிநுட்பமும் இறைபக்தியும் எல்லோரையும் மதிக்கும் பண்பும் கொண்டவராகக் காணப்பட்டார். அவரிடம் காணப்பட்ட வேறு சில சிறப்பம்சங்களாக உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், அடக்கம், பொறுமை, பணிவு, பாசம், அழகு என்னும் பெண்மைக் குரிய குணங்கள் அனைத்தையும் கொண்டு விளங்கினார்.

இவர் மணப்பருவம் அடைந்ததும் அவ்வூரில் வாழ்ந்த அம்பலவாணர் அன்னப்பிள்ளை மகனான சுப்பிரமணியத்தை திருமணம் செய்து கொண்டார். இவர்களின் இல்லறத்தின் பயனாக அற்புதலிங்கம், மகேந்திரம், சுந்தரலிங்கம் (அமரர்), குலஞானேஸ்வரன் (அமரர்), சந்திரகுமார் (அமரர்), இந்திரகுமார் (பிரான்ஸ்), புவனேஸ்வரி என்னும் புதல்வர்களைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார்கள்.

மகன் அற்புதலிங்கம் தாய்மாமன் வீரவாகு சிதம்பரம் தம்பதிகளின் புதல்வி செல்வராணியைக் கரம்பற்றி இல்ல றத்தை நல்லறமாக நடத்தி வருகின்றார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக குமரேஸ்வரன் (அமரர்), நதியா (அமரர்), கஜேந்திரகுமார், செந்தில்குமரன், நகுலகுமார் என்ற மக்கட் செல்வங்களுடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார்.

மகன் மகேந்திரம் மாதகல் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி முருகம்மா தம்பதிகளின் புதல்வி சசிகலாவைத் திருமணம் செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார். இல்லறத்தின் பயனாக தபேஸ்கரன் (லண்டன்), பகிஸ்கரன் (அமரர்) தனுஸ்கரன் (பிரான்ஸ்), ரதிஸ்கா, குகதர்சிகா எனும் மக்கட் செல்வங்களுடன் சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்.

எதிர்பாராதவிதமாக மகன் சுந்தரலிங்கம் நோயினால் 16ஆவது வயதில் அமரரானார். அதுபோல குலஞானேஸ்வரன் (செந்தில்) 1991ஆம் ஆண்டு அமரானார். சந்திரகுமார் எனும் மகனும் எதிர்பாராதவிதமாக அமரத்துவமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மகனான இந்திரகுமார் இதேயூரைச் சேர்ந்த பாலசிங்கம் மணி தம்பதிகளின் புதல்வி நவலக்சுமியை மணந்து கௌதம், பிரகாஷ் என்ற புதல்வர்களைப் பெற்று பிரான்ஸ் நாட்டில் சீரும்சிறப்புமாக வாழ்ந்துவரும் காலத்தில் திடீரென நவலக்சுமி கொடூர நோயான புற்றுநோயினால் மரணமடைந்தார்.

இவரது கடைசிப்பிள்ளை புவனேஸ்வரி ஆவார். இவர் இதேயூரைச் சேர்ந்த செல்லையா சுந்தரம்மா தம்பதிகளின் புதல்வனான சண்முகராசாவை மணந்து சுபாஜினி, தர்மசீலன், ஞானசீலன் (பிரான்ஸ்) பிறேமசீலன் ஆகிய நன்மக்களுடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்.

அமரர் தனது கணவருக்கும் பிள்ளைகளுக்கும் உரிய கடமையினை தவறாது செய்து அவர்களின் பேரன்பிற்கும் பாசத்திற்கும் பாத்திரமானார். இவர் உற்றார், உறவினர், அயலவர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இயல்பு உடையவரும் வீட்டிற்கு வரும் உறவினர்கள் நண்பர்களுக்கு விருந்தோம்பி உபசரிக்கும் சிறந்த பண்பு கொண்டவராகவும் விளங்கினார்.

இவ்வாறு மகிழ்ச்சிகரமான சூழலில் வாழ்ந்து வரும் போது முதுமை காரணமாக அமரர் நோய்வாய்ப்பட்டு சில நாட்கள் படுக்கையில் இருக்கும்போது இனி இவ்வுலகில் வாழ்ந்தது போதுமென்று எண்ணி 22.05.2013 அன்று புதன்கிழமை மாலை நேரம் 6.45 மணியளவில் தனது வாழ்க்கைப் பயணத்தை முடித்து இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் பேரிழப்பு எம்மால் ஈடுசெய்ய முடியாத ஒன்று. மண்ணில் வாழ்ந்தவர்கள் என்றோ ஒருநாள் விண்ணகம் செல்ல வேண்டியவர்களே. அவ்வகையில் அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடியை சென்றடைய பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்திரர்கள் துயரம்

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாட் சுமந்து
முத்தாகப் பெற்றெடுத்த புத்திரர்கள் நாமிருக்க
கலங்க எம்மை வைத்துவிட்டு எங்கு சென்றீர்கள் அம்மா
உத்தமியே உன்னினிய வார்த்தைகளை எப்போ கேட்போம் அம்மா!

## புத்திரி துயரம்

மூச்சுக்கு முந்நூறு தரம் அம்மா வென்றழைப்பேனே
அலுக்காமல் சலிக்காமல் அன்பாக அறிவுரைகள் சொல்வீர்களே
தனித்து நிற்கும் எங்களுக்குத் தோப்பாக இருந்தீர்களே
சோகத்தில் எமை ஆழ்த்தி விட்டு சென்றதெங்கே சொல் அம்மா.

## மருமக்கள் துயரம்

குடும்பத்தின் தலைவியே குலவிளக்கா யமைந்தவளே
எமதருமை மாமியே மாதாவை யொத்தவளே
மாமியார் கொடுமைதனை அறியாமல் காத்தவளே
உன் அன்பான வதனத்தை காண்பதுதான் எப்போதம்மா.

## பேரப்பிள்ளைகள் துயரம்

வெண்மதி போன்றவளே எங்கள் அம்மம்மா எங்கள் அப்பம்மா
நீ உவகையுடன் அழைக்கையிலே எங்கள் உள்ளம் குளிரவைப்பாய்
ஓடி வந்து உன்னிடத்தில் தஞ்சமென வந்தடைவோம்
எத்திக்கு சென்றடைவோம் இனிய மொழி கேட்பதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார், உறவினர் துயரம்

உற்றவராய் உறவினராய் உறுதுணையாய் இருந்த அம்மா
பற்றுவைத்து எம்முடனே பழகும்தன்மை உள்ள மாமி
தக்க தருணத்தில் வந்துதவி புரியும் அக்கா
நிர்க்கதிக்குள்ளாக்கி எமைவிட்டு எங்கு சென்றீர்.

ஊருக்குள் நல்லவராய் உண்மையுள்ள உறவினராய்
யாருக்கும் வெறுக்காத தன்மையராய் வாழ்ந்தவரே
சீருற்றசிவன் பாதஞ் சென்றடைவீர் என்றெண்ணி
நாவுற்று நாம்கைலை நாதனையே வேண்டுகின்றோம்.

## தேற்றம்

மலையாடு மஞ்சுபோல் வையத்துள் வாழ்வு
நிலையா தென்றெண்ணியிரு நெஞ்சமே நினைச் சூழும்
தொலையாத இப்பிறவித்துயர்க் கடலின் சுழிசென்று
அலையா மலிருப்பதற்கு அரனாரின் பதந்தேடு.

### மூன்று விடயங்கள்

1. நேசிக்க வேண்டியது — தாய்மை, நேர்மை, கடின உழைப்பு
2. மதிப்புக்குரிய விடயம் — முதுமை, மதம், சட்டம்
3. பிரமிக்கத்தக்கது — அழகு, அறிவு, ஒழுக்கம்
4. பக்குவப்படுத்துவது — தைரியம், மகிழ்ச்சி, திருப்தி
5. கடைப்பிடிக்கவேண்டியது — சத்தியம், நட்பு, அன்பு.
6. நீக்க வேண்டியது — புகை, குடி, சூதாட்டம்
7. அடக்கவேண்டியது — நாக்கு, கோபம், சோதனை
8. கவனிக்க வேண்டியது — பேச்சு, நடத்தை, செயல்
9. தவிர்க்க வேண்டியது — சோம்பல், பொய், கோள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை

- இலங்கையில் கூடுதலான மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் - வடமாகாணம்.
- நாட்டில் தற்போதுள்ள தேர்தல் மாவட்டங்கள் - 22
- இலங்கையின் ஒரேயொரு பிரதான குடாநாடு – யாழ்ப்பாணக் குடாநாடு
- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்
- இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
- இலங்கையின் தேசிய விளையாட்டு – கரப்பந்தாட்டம்
- இலங்கையின் தேசியக் கொடி – வாளேந்திய சிங்கம்
- இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம்
- இலங்கையின் தேசிய பறவை – காட்டுக்கோழி
- இலங்கையின் தேசிய மிருகம் - யானை
- இலங்கையின் புனித மரமாகப் பௌத்த மதத்தவர்களால் வெள்ளரசு மரம் வழிபடப்படுகின்றது.
- யாழ்ப்பாண இராச்சியத்தைக் கடைசியாக ஆண்ட மன்னன் - சங்கிலியன்
- இலங்கையின் முதலாவது மாநகர சபையாகக் கொழும்பு மாநகரசபை 1865 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- அரசாங்க சபையின் முதலாவது சபை முதல்வர் - சேர். பரன் ஜயத்திலக
- சேர் (Sir) பட்டம் பெற்ற 1வது இலங்கையர் - கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கை பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் முதுகலைமாணி (M.A) பட்டம் பெற்றவர் - B. மகாதேவா
- இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் முதுவிஞ்ஞான மாணி (M.Sc) பட்டம் பெற்றவர் - P. கனகசபாபதி
- முதன் முதலாக வெளிவந்த சிங்களப் பத்திரிகை — சிங்களஹட
- கண்டியிலுள்ள தலதாமாளிகையைக் கட்டியது — 1ஆம் விமலதர்ம சூரிய
- கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் 1957 நவெம்பர் 17இல் இலங்கைக்கு சொந்தமாகியது.
- கொழும்புத்துறைமுகம் 1958 ஒக்ரோபர் 01ஆம் திகதி தேசியமய மாக்கப்பட்டது.
- இலங்கையில் ரூபா சத குற்றி நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு — 1872ம் ஆண்டு
- தாள் நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு — 1885
- "திரிபோஷா" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு — 1973.
- நாட்டின் 1ஆவது பெண்கள் பாடசாலையாக வடமாகாணத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 1824 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கையில் தமிழ்மொழி முதன் முதலில்வெளியாகிய நாளிதழ் அல்லது பத்திரிகை — உதயதாரகை
- இலங்கையில் முதன் முதலில் தோன்றிய செய்தித் தாள் - கொழும்பு ஜேணல்
- இலங்கையில் ஒலிபரப்புச் சேவைக்கெனப் பிரித்தானியரால் 1925 ஆம் ஆண்டு கொழும்பு ஒலிபரப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.
- தொலைக்காட்சி சேவை 1978 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
- சுதந்திர வர்த்தக வலயம் (FTZ) எனும் அமைப்பை ஏற்படுத்து வதற்காக இயற்றப்பட்ட சட்டம் "பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் தொழிற்சாலைகளும் அமைவிடமும்

| | | |
|---|---|---|
| 1. | மட்பாண்டம் | - பிலியந்தல |
| 2. | ரயர் ரியூப் | - களனி |
| 3. | புடவை | - வியாங்கொட, பூகொட, துல்கிரிய |
| 4. | உருக்கு | - ஒருவல |
| 5. | எண்ணெய் சுத்திகரிப்பு | - சப்புகஸ்கந்த |
| 6. | ஒட்டுப்பலகை | - ஜின்தோட்ட |
| 7. | தோல் | - மட்டக்குளிய |
| 8. | உலோகப்பொருட்கள் | - யக்கல |
| 9. | ஓடு | - நாத்தாண்டியா |
| 10. | முகமூடி | - அம்பலாங்கொட |
| 11. | பீங்கான் | - நீர்கொழும்பு |
| 12. | கடதாசி | - எம்பிலிப்பிட்டிய, வாழைச்சேனை |
| 13. | சீனி | - பெல்வத்த, ஹிங்குரான, கந்தளாய் |
| 14. | சப்பாத்து | - மட்டக்குளிய |
| 15. | கட்டிப்பால் | - பொலநறுவ |

☞ வாழ்நாளில் இனிய பருவம் இளமை. இதை நாம் முதுமையில் தான் உணர்கிறோம்.

☞ எதிபார்ப்புக் குறைவாக இருப்பின் ஏமாற்றம் மிகுதியாக ஏற்படாது.

☞ பல நற்பண்புகளை இருளில் மறைக்க ஒரு தீயசெயல் போதுமானது.

❖ போவதைக் கண்டு கலங்காமல், வருவதைக் கண்டு மயங்காமல், பயந்து பயந்து நடுங்காமல், கோபத்தினாலே குதிக்காமல் இருக்கின்றானே, அந்த மனிதன் தான் உறுதியான அறிவு வாய்ந்தவன். **- பகவத் கீதை -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுகள் சில...

- ஒரு சிலந்தி வலையைப் பின்ன எடுக்கும் நேரம் : **3 மணித்தியாலம்.**
- சிப்பிக்குள் முத்து விளைய எடுக்கும் ஆண்டுகள் : **பதினைந்து (15) ஆண்டுகள்**
- 300 ஆண்டுகள் உயிர்வாழும் விலங்கு : **முதலை**
- 03 ஆண்டுகள் கண்விழியாது தூங்கும் விலங்கு: **நத்தை**
- உலகில் மிகப்பெரிய முட்டையிடும் பறவை: **நெருப்புக்கோழி**
- அதிக முட்டையிடும் உயிரினம் : **கறையான்**
- ஆண், பெண் இல்லாத உயிரினம் : **நத்தை**
- நெருப்புக்கோழி அதிகமாகக் காணப்படும் நாடு: **தென்னாபிரிக்கா**

---

- பலரைச் சில காலமும் சிலரைப் பலகாலமும் ஏமாற்றலாம்.
- தனக்காக வாழ்வது இன்பம், பிறருக்காக வாழ்வது பேரின்பம்.
- நெஞ்சில் நேர்மைத்தனம் இருந்தால் குணத்தில் அழகு இருக்கும்.
- ஒரு கணப்பொறுமை பத்து ஆண்டின் இன்பமாகும்.
- சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பி அழைக்க முடியாது.
- தண்டனை என்பது அநியாயம் செய்தவர்களுக்கு செய்யப்படும் நியாயம்.
- நாம் வாழவேண்டும் என்பது முக்கியமல்ல. வாழ்க்கைக்கு அப்பால் நம்முடைய பெயர் பொறிக்கப்படவேண்டும். அதுதான் முக்கியம்.
- எல்லா மனிதனையும் நம்பிவிடுவது ஆபத்து. ஒருவரையும் நம்பாலிருப்பது பேராபத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு வினாவிடைகள்

01. இலங்கையின் முதலாவது பெண்கள் பாடசாலை எது? எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது?
**உடுவில் மகளிர் கல்லூரி, 1824ஆம் ஆண்டு**

02. இலங்கையில் வெளியாகிய முதல் தமிழ்ப் பத்திரிகை எது?
**உதயதாரகை**

03. ஆறு அறிவுள்ள மனித இனம் என்கிறோம் அவை எவை?
**1) தொட்டு உணரும் அறிவு (குளிர், சூடு)**
**2) பார்க்கும் அறிவு**
**3) பேசும் அறிவு**
**4) கேட்கும் அறிவு**
**5) முகரும் (மணக்கும்) அறிவு**
**6) பகுத்தறிவு (சரி, பிழை காணும் அறிவு)**

04. மிக வேகமாக செல்லக்கூடிய பாலூட்டி விலங்கு எது?
**சிறுத்தைப் புலி**

05. சினிமா தியேட்டர் இல்லாத நாடு எது? **பூட்டான்**

06. நாணயங்கள் இல்லாத நாடு எது? **பராகுவே**

07. பின்நோக்கி பறக்கக்கூடிய பறவை இனம் எது?
**ஹம்மிங் பேட் (Humming Bird)**

08. மூன்று இதயம் கொண்ட உயிரினம் எது?
**ஒக்டோபஸ் (Octopus)**

09. மிகக்குறைந்த எழுத்துக்கள் கொண்ட மொழி எது? எத்தனை எழுத்துக்கள்? **ஹவாய், 12 எழுத்துக்கள்**

10. இலவச சீருடை விநியோகம் எந்த ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது? **1993ம் ஆண்டு**

11. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியின் பெயர் யாது?
**D.S. சேனநாயக்கா**

12. சார்க் நாடுகளின் எண்ணிக்கை எத்தனை அவை எவை?
**08 - இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. உலகில் மிக நீளமான கடற்கரையைக் கொண்ட நாடு எது? எத்தனை கி.மீற்றர்? **கனடா - 243,790 கி.மீற்றர்**

14. உலகில் கூடிய மக்கள் உண்ணும் உணவு எது? **நெல் (அரிசி)**

15. துணைக்கோள்கள் அற்ற கிரகம் எது? **புதன்**

16. மிகக்கூடிய காலம் உயிர்வாழும் உயிரினம் எது? **ஆமை**

17. உலகில் அதிக அளவிலான மக்கள் பேசும் மொழி எது? **மண்டரின் (சீனமொழி)**

18. மிகநீண்ட தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது? **கிரேக்கம்**

19. இமை மூடப்பட்டு இருந்தாலும் பார்க்கக்கூடிய விலங்கு எது? **ஒட்டகம்**

20. இலங்கையை ஆண்ட முதலாவது அரசி யார்? **அனுலா**

21. இலங்கையில் முதலாவது அஞ்சல் முத்திரை வெளியிடப் பட்ட ஆண்டு எது? **1857இல்**

22. விமானத்திலுள்ள கறுப்புப் பெட்டியின் (Black Box) நிறம் என்ன? **செம்மஞ்சள்**

23. பச்சைத் தங்கம் (Green gold) என அழைக்கப்படுவது எது? **சஞ்சீவி மரம் (யூகலிப்டஸ் மரம்)**

24. சுருங்கை என்றால் என்ன? **நிலத்தின்கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி**

25. சார்க் அமைப்பில் கடைசியாக இணைந்த நாடு எது? **ஆப்கானிஸ்தான்**

26. உலகில் பொருளாதார ரீதியில் முன்னணி வகிக்கும் நாடு எது? **யப்பான்**

27. கல்குலேட்டரை (Adding machine) கண்டுபிடித்தவர் யார்? **பஸ்கால் (Pascal)**

28. இடது கையால் விளையாட முடியாத விளையாட்டு எது? **போலோ**

29. தலை இல்லாமல் பல மணி நேரம் உயிர் வாழக்கூடிய உயிரினம் எது? **கரப்பான் பூச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. உலகிலுள்ள மிகப்பெரிய இந்துக் கோயில் எது? எங்குள்ளது?
**அங்கோவாக்ட் (விஷ்ணு கோயில்) கம்போடியா**

31. இலங்கையில் இலவசக் கல்வி எத்தனையாம் ஆண்டு? யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
**1945இல் - C.W.W. கன்னங்கராவால்**

32. 5 ஆண்டு முடிவில் கொண்டாடப்படும் விழா? **மரவிழா**

33. உலகில் அதிக எண்ணிக்கையான வங்கிகள் எந்த நாட்டில் உள்ளது? **சுவிஸ் - 572 வங்கிகள்**

34. கணனியில் மவுஸ் ஐக் கண்டுபிடித்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு? **அல்பேர்ட் டக்லஸ் (1962இல்)**

35. இந்துசமய கடவுள்களுக்கு வடிவங்கள் வரைந்தவர் யார்? **ரவி வர்மா**

36. கணனியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
**சார்ள்ஸ் பபேஜ் (Charls Babbage)**

37. கணனியில் மிகவும் சக்தி வாய்ந்த கணனி எது? எந்த நாட்டில் தயாரித்து வைத்திருக்கின்றார்கள்?
**சுப்பர் கணனி - ஐக்கிய அமெரிக்கா**

38. கணனியில் ஞாபக சக்தி கொள்ளளவை எவ்வாறு அழைப்பர்? **ஜீகாபைட், ரெகாபைட் (Giga Byte, Tera Byte)**

39. அட்டாளை என்பது எது?
**தோட்டத்தில் இடத்திற்கு இடம் மாற்றக்கூடிய இருக்கை**

40. புரசை எனப்படுவது எது?
**யானையின் கழுத்திலிருக்கும் கயிறு**

41. 55 ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழாவின் பெயர் என்ன? **மரகத விழா**

42. சந்திரனில் தேசிய கொடியை நாட்டிய நாடுகள் எவை?
**ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா**

43. கருத்தரித்த பின் முதலில் உற்பத்தியாகும் உறுப்பு எது?
**கண்**

44. சத்தமிடத் தெரியாத மிருகம் எது? **ஒட்டகச்சிவிங்கி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. அலுக்கோசு எனப்படுபவர் யார்?
**தூக்கு தண்டனை நிறைவேற்றும் நபர்**

46. மனிதனுடைய இரத்தம் சுமார் எத்தனை நாட்கள் பழுதடையாமல் இருக்கும்? **40 (நாற்பது) நாள்**

47. உலகில் முதலாவது சோதனைக்குழாய்க் குழந்தையின் பெயர் யாது? **லூசி பிரவுண்**

48. கூர்ப்பின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
**சாள்ஸ் டார்வின்**

49. மனித உடலில் உள்ள மிகப்பெரிய உறுப்பு எது?
**கல்லீரல்**

50. விண்வெளிக்குச் சென்ற முதல் உயிரினம் எது?
**லைக்கா எனும் நாய்**

51. வருடத்தில் மிகநீண்ட பகல் கொண்ட நாள் எது? **யூன் 21**

52. நாட்காட்டியை அறிமுகப்படுத்தியவர் யார்? **யூலியசீசர்**

53. நுளம்பின் ஆயுட்காலம் சராசரியாக எவ்வளவு காலம்?
**25 நாட்கள்**

54. உலகின் நீளமான மதில் எது? நீளம் எவ்வளவு?
சீனப்பெருஞ்சுவர் **2240 km**

55. நேரக் கணிப்பில் a.m, p.m எனப்படுவது?
**Anti meridiem** (காலை) **Post meridiem** (மாலை)

56. ஒரே நேரத்தில் அதிக முட்டைகள் இடும் இனம் எது?
**கறையான் (சுமார் 30,000 முட்டைகள் இடும்)**

57. 2008ஆம் ஆண்டிற்கான நேபல் பரிசு பெற்ற தமிழன் யார்?
**வெங்கட் ராமன் இராமகிருஸ்ணன்**

58. இந்தியா, சீனா எல்லையை பிரிக்கும் எல்லைக் கோட்டின் பெயர் என்ன? **மக்மோகன் எல்லைக்கோடு**

59. நாட்டின் படத்தை தேசிய கொடியில் கொண்டுள்ள நாடு?
**சைபிரஸ்**

60. கோர்க்காலி என்பது எது?
**04 கால்கள் உள்ள மேடை (பெரிய பெட்டி வைப்பதற்காக)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் குறிப்புக்கள்

1) வசம்பை வறுத்து பொடியாக்கி தேனில் குழைத்து குழந்தைகளுக்கு கொடுக்க கீரைப்பூச்சி, குடல் பூச்சி ஒழியும்.

2) வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிட்டு பசும்பால் அருந்தி வர உடல் பலவீனம் மாறி உடற்பலம் பெறும்.

3) இலந்தைமர இலைகளை எடுத்து நீர்விட்டு அரைத்து தினசரி ஒரு டம்ளர் நீரில் கலந்து அருந்திவர உடல்சதை குறைந்து மெலியலாம்.

4) திராட்சைப்பழச் சாற்றில் தேன் கலந்து உணவு உண்டபின் சாப்பிட்டு வர உடல் நடுக்கம் தீரும்.

5) அதிமதுரத்தை பாலில் அரைத்து தலையில் தேய்த்து ஊறிய பின் குளித்துவர இளநரை மாறும். அத்தோடு மயிர் உதிர்தல் நீங்கும்.

6) தினசரி காலையில் இஞ்சிச் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டு வர உடல் பலம்பெறும். இளமை ஏற்படும்.

7) குழந்தை தவறுதலாக சுண்ணாம்பை எடுத்து சாப்பிட்டால் மஞ்சள் பவுடரை நீரில் கரைத்து வடிகட்டி சிறிதளவு கொடுக்க அபாயம் தீரும்.

8) கள்ளி, எருக்கலைப்பால் கண்ணில் பட்டால், உடன் உடைத்த தேங்காயை துருவி சிறிது பால் பிழிந்து விடவும்.

9) காதுக் குத்துக்கு: தயிர்வளை இலையைப் பிழிந்து நான்கு அல்லது ஐந்து துளி சாறு காதில் விடவும்.

10) காதினுள் புண்ணிற்கு, காதிரைச்சலுக்கு: தயிர்வளை இலைச் சாறும் நல்லெண்ணெயும் சமன்கூட்டிக் காய்ச்சிய எண்ணெயை காதில் இரண்டு அல்லது மூன்று துளிவிட்டு தலையிலும் பூசவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

*அம்பலவாணர் + *குஞ்சரம்

- *செல்லம்மா
- ***சரஸ்வதி** + *சுப்பிரமணியம்
  - அற்புதலிங்கம் + செல்வராணி
    - *குமரேஸ்கரன்
    - *நதியா
    - கஜேந்திரகுமார்
    - செந்தில்குமரன்
    - நகுலகுமார்
  - மகேந்திரம் + சசிகலா
    - தபேஸ்கரன் (லண்டன்)
    - *பகிஸ்கரன்
    - தனுஸ்கரன் (பிரான்ஸ்)
    - ரதீஸ்கா
    - குகதர்சிகா
  - *சுந்தரலிங்கம்
  - *குலஞானேஸ்வரன்
  - *சந்திரகுமார்
  - இந்திரகுமார் (பிரான்ஸ்) + *நவலக்சுமி
    - கௌதம்
    - பிரகாஷ்
  - புவனேஸ்வரி + சண்முகராசா
    - சுபாஜினி
    - தர்மசீலன்
    - ஞானசீலன் (பிரான்ஸ்)
    - பிறேமசீலன்
- *அன்னம்மா
- *சுப்பிரமணியம்

*அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வம்

**திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தியறிந்து
உட்ன் வந்து உதவியவர்களுக்கும்
இறுதிநாள் வரை எம்முடன் இருந்து துயரைப்
பகிர்ந்துகொண்ட உள்ளங்களுக்கும்,
மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும்,
தொலைபேசி, கடிதம், தந்தி மூலம் ஆறுதல் கூறிய
அனைவருக்கும், அன்னாரின்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில்
பங்குகொண்டவர்களுக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

*நன்றி.*



மாதகல்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகின்றது.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

கவிதரன் பிறின்டேர்ஸ்,
வழக்கம்பரை, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org